**சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.II**
**மோட்டார் வாகன விபத்து வழக்கு கோருரிமை தீர்ப்பாயம், கடலூர்.**
**MCOP.No.591 of 2021**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | சதீஷ்குமார் |
| **Father's Name** | **:** | கணேசன் |
| **Age** | **:** | 34 |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 24th day of July, 2025.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

விபத்து நடைபெற்ற தேதி தற்போது நினைவில்லை. 2020 நவம்பர் மாதம் விபத்து நடைபெற்றது. சத்திரம் ரோட்டிலிருந்து குள்ளஞ்சாவடி நோக்கி வரும்போது விபத்து நடைபெற்றது. சத்திரத்திலிருந்து குள்ளஞ்சாவடி கிழக்கு திசையில் உள்ளது என்றால் தென் கிழக்கு திசையில் உள்ளது என்று நினைக்கிறேன் குறிப்பாக தெரியவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து தொடர்பாக புகார் எனது தகப்பனார் அளித்தார். எந்த அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து தொடர்பாக FIR பதிவு செய்யப்பட்டது. என் தகப்பனார் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தார்கள். அந்த FIR ஐ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகனத்தில் எனக்கு பின்னால் சசிகுமார் என்பவர் அமர்ந்து பயணம் செய்தார். நான் சென்ற இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் என நினைக்கின்றேன். என் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த சசிகுமார் எனக்கு எதிராகவும் எங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிராகவும் எம்சிஓபி.276/2021 (SSJ court, Cuddalore) என்ற வழக்கினை தாக்கல் செய்து மக்கள் நீதிமன்றத்தில் அந்த

வழக்கு ரூ.200000/- இழப்பீடு வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். முதல் எதிர்மனுதாரர் கதிர்வேல் விபத்தில் காயமடைந்தது தொடர்பாக எனக்கு எதிராகவும் எங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிராகவும் எம்சிஓபி.315/2021 (SSJ court, Cuddalore) என்ற வழக்கினை தாக்கல் செய்து மக்கள் நீதிமன்றத்தில் அந்த வழக்கு ரூ.300000/- இழப்பீடு வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் எங்கள் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்கியுள்ளதால் விபத்து தினத்தன்று நான் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் மறுக்கிறேன். ஒரு லாரியை முந்திசெல்லும்போது எதிர்பாராத விதமாக விபத்து நடைபெற்றுவிட்டது. மசாஆ.1 முதல் தகவல் அறிக்கையின்படி குற்ற வழக்கு எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் குவைத் நாட்டில் நான் இரண்டரை வருடங்கள் வேலை பார்த்துவந்தேன். நான் 12ம் வகுப்பு பாதியில் நின்றுவிட்டேன். விசா காலம் முடிந்து திரும்ப வந்துவிட்டேனா என்றால் 2020 வருடம் அக்டோபர் மாதம் நான் விடுமுறையில் ஊருக்கு வந்தேன். எனது பாஸ்போட் தொலைந்துவிட்டது அந்த விசாவை தற்போது தாக்கல் செய்ய இயலாது. ஆனால் பாஸ்போட் நகல் உள்ளது. பாஸ்போர்ட் தொலைந்தது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. அடிப்பட்டு தொடையில் பிளேட் வைக்கப்பட்டிருந்ததால் நான் வெளிநாடு செல்ல இயலவில்லை. நான் குவைத் நாட்டில் பணிபுரிந்த தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் நான் பணிபுரிந்த இடத்திலேயே உள்ளன.  ஊருக்கு வரும்போது திடீரென விபத்து நடைபெற்றது. 11.05.2019,11.05.2020,21.05.2020 என Ex P6 முதல் P8 ஆவணங்களில் ஆவண முடிவு தேதியுள்ளதால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் இழப்பீடு கோரமுடியாது என்று சொன்னால் மறுக்கிறேன். ஒவ்வொரு வருடத்திற்கும் அடையாள அட்டை வழங்குவார்கள். 11.05.2020 பிறகு புது அடையாள அட்டை வழங்கவில்லை. அதற்குள் விபத்து நடைபெற்றுவிட்டது. எனது பாஸ்போட்டை Delhi உள்ள Agent க்கு அனுப்பியது தொடர்பாக ஆவணங்களை

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஈராக் நாட்டிற்கு வேலைக்கு செல்லுவதற்காக பாஸ்போட்டை அனுப்பி வைத்தேன். நான் பாஸ்போட் அனுப்பிய காலத்தில் ஏற்கனவே வேலை பார்த்த நிறுவனத்தில் எனது வேலை முடிவுற்றது என்றும் அதனால் தான் வேறு நாட்டில் வேலைக்கு விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். விபத்தின் காரணமாக என்னால் எனது பழைய நிறுவனத்திற்கு வேலைக்கு செல்ல இயலவில்லை. அதனால் விசா காலம் முடிந்துவிட்டது. அதன் காரணமாக வேறு நாட்டிற்கு வேலைக்காக விண்ணப்பித்து இருந்தேன். 2022 வருடம் ஈராக் நாட்டிற்கு செல்வதற்காக நடவடிக்கை எடுத்தேன். அச்சமயம் எனக்கு உடல் முழுவதும் குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. தற்போதும் பிரச்சனை இருந்து வருகிறது. நான் 11.05.2020க்கு பிறகு குவைத் நாட்டில் வேலை செய்யவில்லை என்றும் அப்போதே இந்தியா திரும்பிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தொகுப்பு மருத்துவ பில்லில் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு நான் மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றும் ஒரே ரசீதினை இருமுறை பயன்படுத்தி கூடுதல் தொகை பெற முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையின்போது எனது பணி நியமண ஆணை, சம்பள பட்டியல்கள், பாஸ்போர்ட் நகல் ஆகியவைகளை தாக்கல் செய்யாததால் தவறான விபரங்களின் அடிப்படையில் அதிக இழப்பீடு கோருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாஸ்போட் நகல் மட்டும் என்னால் தாக்கல் செய்ய இயலும். நான் எனக்கு முன்னால் சென்ற லாரியை முந்தும்போது எதிர்திசையில் ஓரமாக வந்த முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்று சொன்னால் லாரி எதிர்திசையில் வந்தது. அதிக வெளிச்சத்துடன் லாரி வந்தது. பின்னர் நான் முந்தி செல்ல முயன்றபோது விபத்து நடைபெற்றது. விபத்தானது எனது கவனகுறைவால் நிகழ்ந்தது என்றும் அதனை ஒப்புக் கொண்டு எனது காப்பீட்டு நிறுவனமும் என் பின்னால் வாகனத்தில் அமர்ந்து

வந்த நபருக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் இழப்பீடு வழங்கியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Spl. District Judge, No.II*
*Spl. District Court No. II*
*to deal with MCOP Cases,*
*Cuddalore.*